
# யாழ்ப்பாண வாழ்வியல்



# Lifestyle of Jaffna

**2012**

# யாழ்ப்பாண வாழ்வியல்

## *Life Style of Jaffna*

# யாழ்ப்பாண வாழ்வியல்


பதிப்பாசிரியர்

பேராசிரியர் ப. புஷ்பரட்ணம்



வரலாற்றுத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை.

கலைக்கேசரி,
எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் (சிலோன் - பிரைவேட்) லிமிட்டெட்.

**2012**

# *Life Style of Jaffna*

Editor
Professor P. Pushparatnam

DEPARTMENT OF HISTORY,
UNIVERSITY OF JAFFNA, SRI LANKA.

KALAIKESARI,
EXPRESS NEWSPAPERS (CEYLON) (PVT) LTD.

2012

# தமிழர் பண்பாட்டு வாழ்வியலில் ஆவுரஞ்சிக் கற்கள் மற்றும் சுமைதாங்கிக் கற்கள்

**வீரசிங்கம் சிவரூபி**
தொல்லியல் உதவி விரிவுரையாளர், வரலாற்றுத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

இலங்கை தொல்லியல் மரபுரிமைச் சட்ட விதியின்படி, இற்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றுப் பெறுமதியுடைய வாழ்விடங்கள், வழிபாட்டிடங்கள், நிர்வாக மையங்கள், பிற கட்டடங்கள் என்பன மரபுரிமைச் சின்னங்களாகப் பிரகடனப்படுத்தலாம் எனக் கூறப்படுகின்றது. இவ்வரிசையில் குடாநாட்டில் பாவனையில் இருந்த, இருக்கின்ற வீதியோரங்களில் காணப்படும் பாரம்பரிய பண்பாட்டுச் சின்னங்களான ஆவுரஞ்சிக்கல், சுமைதாங்கி, மடம் என்பனவும் சிறப்பாக குறிப்பிடத்தக்கன. பொருளாதார, சமூக, பண்பாட்டுத் துறைகளில் ஏற்பட்ட மாற்றங்கள், வளர்ச்சி என்பவற்றின் காரணமாக ஆவுரஞ்சிக்கல், சுமைதாங்கி, மடம் போன்ற மரபுரிமைச் சின்னங்கள் இன்றைய மக்கள் வாழ்வியலிலிருந்து அருகி வருவதனை அவதானிக்க முடிகின்றது. இவற்றின் வரலாற்றுத் தொன்மையும், அவை ஏன் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதன் அவசியத்தையும் ஆராய்வதே இவ்வாய்வின் கருப்பொருளாகும்.

யாழ்ப்பாணத் தீபகற்பத்திற்கு 2500 ஆண்டுகளுக்குக் குறையாத தொன்மையான, தொடர்ச்சியான வரலாறு உண்டு. இப்பிராந்தியம் 15 ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணம் என்ற பெயரைப் பெறுவதற்கு முன்னர் நாகதீபம், நாகநாடு என்ற பெயரால் தனித்துவமான பிராந்தியமாக வரலாற்று மூலங்களில் அடையாளப்படுத்தப்பட்டு வந்துள்ளது. இருப்பினும், ஐரோப்பியர் ஆட்சிக்கு முன்பிருந்த பலமரபுரிமைச் சின்னங்கள் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் கடைப்பிடித்த கலையழிவுக் கொள்கையால் அழிவடைந்து போயுள்ளன.

இன்று, யாழ்ப்பாணக் கோட்டை, அகழ்வாய்வில் கிடைக்கும் ஆலய அழிபாடுகள், பிற கட்டட எச்சங்கள் ஆகியன எவ்வாறு போர்த்துக்கேயர் வருகைக்கு முன்னர் குடாநாட்டின் பண்பாட்டு மரபுரிமை இருந்தது என்பதற்கு சிறந்த சான்றுகளாகும். ஆயினும், அவர்களது கலையழிவுக் கொள்கையில் இருந்து தப்பிய சில சின்னங்களாக மடங்கள், ஆவுரஞ்சிக்கற்கள், சுமைதாங்கிகள் இன்றும் குடாநாட்டில் காணப்படுகின்றன. இவற்றுள் பல பிற்காலத்தில் தோன்றியிருந்தாலும் அவற்றிற்கு எல்லாம் 2000 ஆண்டுகளுக்கு குறையாத வரலாற்று மரபு உண்டு என்பதை பழந்தமிழ் இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன.

## ஆவுரஞ்சிக்கல்

மாடுகளுக்கு ஏற்படும் ஒரு வகை கடியைப் போக்குவதற்கு அமைக்கப்பட்ட ஆவுரஞ்சிக் கற்களைக் குற்றால புராணம், சூடாமணி நிகண்டு என்பன 'ஆவுரஞ்சுதறி' 'ஆதீண்டுகுற்றி' எனக் குறிப்பிடுகின்றன. சூடாமணி நிகண்டு ஆவுரஞ்சிக்கல் பற்றி குறிப்பிடும் போது,

'அறவையாம் பிணம் அடக்கல் அறவைத் தூரியம்வ ருந்தா
நிறுவியே இடம்வி டாமல் நிறையத்தின் பண்டம் நல்கல்
உறுதிஆ வுரிஞ்சு சிறை தறி இவை யோதும் எண்ணான்கு
அற நிலை அபிதா னங்கள் அம்பிகை செய்யுமாறே'.

(சூடாமணி நிகண்டு பக்: 136)

எனவும் அதாவது இந்துக்களின் தானதர்மங்களில் ஒன்றாக ஆவுரஞ்சிக்கல் நாட்டுதல் குறிப்பிடப்பட்டிருப்பது இதன் முக்கியத்துவத்திற்கு தக்க சான்றாகும். கந்தபுராண அசுர காண்டம் மார்க்கண்டேய படத்திலே ஒரு முனிவரின் தவப்பயனின் வலிமையினைக் குறிப்பிடும்போது ஆவுரஞ்சிக்கல் பற்றிய தகவல் இடம் பெற்றிருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இதனை,

'அத்தலை ஒருசார் எய்தி ஆனினந் தீண்டு குற்றி
ஒத்தென அசைதலின்றி உயிர்ப்பொரீஇ உலகமெல்லாம்
பித்தென உன்னி மாயாப் பேரின்ப அளக்கமூழ்கி
நித்தன்ஐ யெழுத்தும் அன்னான நிலமையும் நினைத்து நோற்றான்'

(கந்தபுராண அசுரகாண்டம் மார்க்கண்டேய பாடல் 3, பக்: 539)

இப்பாடல் அடிகளில் குளக்கரையின் ஒரு புறமாக சென்று சேர்ந்து தியான நிலைகூடி அக்குளத்து நீர் அருந்தவரும் பசுக்கள் சொறிதேய்ப்பதற்கு குளக்கரையில் நாட்டப்பெற்ற ஒரு கல் போல அசைவிலாது அம் முனிவர் நிட்டையில் இருந்தார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

'ஓவிய மவுன முற்றாங் குணவொடும் உறக்கம் நீங்கித்
தாவற நோக்கும் வேலைத் தடமரை கடமை யாதி
மேவிய விலங்கு தத்தம் மெய்யகண் டூயம் யாவும்
போவது கருத அன்னான் புரத்திடை உரைத்துப் போமால்'

(கந்தபுராண அசுரகாண்டம் மார்கண்டேய பாடல் 4, பக்: 540)

பொருள் எழுதிய சித்திர ஓவியம் போல் மௌன முற்று உணவோடு நித்திரையும் நீக்கி, குறைவிலாது தவம் செய்யும் நேரம் அக்குளத்தில் நீர் அருந்தவரும் பெரிய மரையும் காட்டுப் பசுவும் ஆதியாகவுள்ள அவ்வனத்தில் நிலவும் மிருகம் எல்லாம் நீர் அருந்திய பின்னர் தங்கள் மேனியிலுள்ள சொறிகள் யாவும் தீர்வதைக் குறித்து அசைவற்றிருந்த, தவம் செய்த இந்த முனி குமாரனை ஓர் ஆவுரஞ்சிக்கல் என எண்ணி முனிவனின் மேனி மேலாக உராஞ்சிவிட்டுப் போவன என மார்க்கண்டேய படலத்தில் ஆவுரஞ்சிக்கல் பற்றி விரிவாக கூறப்பட்டுள்ளது.

ஆவுரஞ்சிக் கல்லினை 'ஆ உரோஞ்சுதல்' என பிரித்து ஆராய முற்படும் போது 'ஆ' என்பது பசு வினையும் 'உரோஞ்சுதல்' என்பது உரசுதல் அல்லது முட்டுதல் எனவும் பொருள்படும். மந்தைகள் உடலில் ஏற்படும் கடியினை நீக்கும் பொருட்டு உரசுவதற்காக அமைக்கப்பட்ட கல்லே ஆவுரஞ்சிக் கல்லாகும். நீர் அருந்தும் போது அவற்றிற்கு 'தினவு' என்னும் ஒருவிதமான கடி ஏற்படுவதாகவும் அக்கடியினைப் போக்குவதற்காக அமைக்கப்பட்ட கல்லே ஆவுரஞ்சிக் கல் எனவும், அதன் பயன்பாடு கருதியே மந்தைக்கல், ஆதிண்டுகுற்றி, ஆவுரிஞ்சி

எனவும் அழைக்கப்படுகின்றன. ஆவுரஞ்சிக் கற்களினை வடிவமைக்கும் போது தனிக் கல்லில் வடிவமைத்திருந்தனர். இவை பெரும்பாலும் கண்டற்கற்களினால் வடிவமைக்கப்பட்டிருந்தன.

யாழ்ப்பாணத்தில் 2500 ஆண்டுகளுக்கு முன்னரே விவசாய உற்பத்திக்காக மாடுகள் வளர்க்கப்பட்டதற்கான ஆதாரங்கள் கந்தரோடை, ஆனைக்கோட்டை ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் அகழ்வாய்வில் கிடைத்துள்ளன. இதனால், அக்காலத்தில் இருந்தே ஆவுரஞ்சிக் கற்களை அமைக்கும் மரபு இங்கிருந்திருக்கலாம் எனக் கூறமுடியும். மாடுகளுக்கு ஏற்படும் 'தினவு' எனும் கடியைப் போக்குவதற்காக இக்கற்கள் நாட்டப்பட்டாலும் அவற்றைச் சமூகத்தில் உள்ள எல்லோரும் அமைத்தனர் எனக் கூறமுடியாது.

பண்டைய சமூக அமைப்பில் பொருளாதாரத்தின் அளவீடாகவும், சமூக அந்தஸ்தின் குறியீடாகவும் மாடுகள் காணப்பட்டதால் சமூகத்தில் உயர்நிலையில் இருந்தவர்களே இக்கற்களை முதலில் அமைத்துள்ளனர் என்பது தெரிகிறது. இவை மாடுகளுக்காக அமைக்கப்பட்டாலும் அவற்றை அமைத்துக் கொடுத்தவர்களின் நோக்கம் பலதரப்பட்டதாகக் காணப்படுகின்றது. பெரும்பாலான ஆவுரஞ்சிக் கற்கள் இறந்தவர் நினைவாக அமைக்கப்பட்டனவாக உள்ளன. இம்மரபு தமிழர் மத்தியில் இற்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு முன்னர் இறந்தவரை அடக்கம் செய்த இடத்தில் நினைவுக்கல் எழுப்பி அவர் பெயரையும், வரலாற்றையும் கல்லில் பொறித்து வைத்ததை நினைவுபடுத்துவதாக உள்ளது.

வடமராட்சி - உடுப்பிட்டிக் கிராமத்திலுள்ள 17 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஆவுரஞ்சிக்கல், அக்கிராமத்து பெண் ஒருவர் இறந்ததன் நினைவாக அமைக்கப்பட்ட வரலாற்றைக் கல்லில் சாசனமாகப் பொறித்து அமைக்கப்பட்ட நிலையில் தொல்லியல் சிறப்பு கலை மாணவன் வி.மணிமாறன் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது. வடமராட்சி, உடுப்பிட்டி பிரதேசத்தில் கண்டுபிடிக்கப் பட்டுள்ள இக் கல்வெட்டினை பேராசிரியர் புஸ்பரட்னம் அவர்களும் உறுதிப் படுத்தியுள்ளார். தும்பளையில் காணப்படும் சில ஆவுரஞ்சிக்கற்கள் அவற்றை அமைத்துக் கொடுத்தவரின் சமய ஈடுபாட்டை பிரதிபலிக்கும் நோக்கில் அதில் சூரியன், சந்திரன், வேல், சூலம் முதலான குறியீடுகள் பொறிக்கப்பட்டுள்ளன. சில ஆவுரஞ்சிக் கற்கள் இலிங்க வடிவில் அமைக்கப்பட்டதால், அவ்விடங்கள் பிற்காலத்தில் சிவன் ஆலயமாக மாற்றமடைந்ததற்கான ஆதாரங்கள் உண்டு.

**சுமைதாங்கிக்கல்**

குழந்தையைப் பிரசவிக்கும் போது கர்ப்பத்துடன் இறந்தவள் வயிற்று சுமையால் உண்டான வலிநீங்கும் பொருட்டு அமைக்கப்பட்டதே 'சுமைதாங்கி' எனத் திருவிளையாடற் புராணம் கூறுகிறது. சுமைதாங்கிக்கல் பண்டைய காலத்தில் மக்கள் ஓரிடத்தில் இருந்து இன்னோர் இடத்திற்குப் பயணம் செல்லும்போது அவர்கள் கொண்டு செல்லும் தலைச்சுமையை இறக்கி வைத்து, ஓய்வெடுப்பதற்காக வீதி ஓரங்களில் அமைக்கப்பட்டதாகும். இச்சுமைதாங்கிக்கு அருகில் பெரும்பாலும் ஆவுரஞ்சிக்கல், நீர்த்தொட்டி, மடம் முதலியனவும் காணப்படுகின்றன. இவ்வாதாரங்கள் பண்டைய காலத்தில் மக்கள் ஒன்று கூடும் இடமாகவும், வணிகப் பொருட்கள் பரிமாறப்பட்ட இடங்களாகவும் இருந்துள்ளன

என்பதைக் காட்டுகின்றன. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதியில் சுமைதாங்கி என்பது கிராமப்புறச்சாலை ஓரத்தில் தலைச்சுமையை இறக்கி வைத்து இளைப்பாற அமைக்கப்பட்டிருப்பது எனவும், ஆளுயரத்தில் இரண்டு கல்தூண்களின் மேல் மற்றொரு நீளமான கல் வைக்கப்பட்டுள்ள அமைப்பு எனவும் கூறப்படுகின்றது. (க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி,1992: 604)

குடாநாட்டில் உள்ள பெரும்பாலான சுமைதாங்கிக் கற்கள் கருவுற்ற பெண் இறந்ததன் நினைவாகவே அமைக்கப்பட்டதாகத் தெரிகிறது. அதில் இறந்தவர் பெயர், இறந்ததற்கான காரணம், அவரின் சமய நம்பிக்கை முதலான விபரங்களும் எழுதப்பட்டுள்ளன. இவற்றிலிருந்து ஆவுரஞ்சிக் கற்களைப் போல் சுமை தாங்கிகளும் அவற்றை அமைத்துக் கொடுத்தவரின் சமூக அந்தஸ்து, பொருளாதார நிலை, சமய நம்பிக்கைகளைப் பிரதிபலிப்பதாக அமைந்துள்ளன என்பது தெரிகிறது.

இச்சுமைதாங்கி கற்களை அமைத்துக் கொடுத்தவர்கள் தமது குடும்பப் பெண் இறந்த நாளில் 'இச்சுமை தாங்கியை ஒரு கோவில் போல் அலங்கரித்து' இதன் முன்னால் சமயக் கிரியைகள் நடத்திவரும் மரபு இன்றும் வடமராட்சியில் காணப்படுகின்றது. சுமைதாங்கிக்கல் அமைக்கப்பட்டதன் நோக்கம் வேறுபட்டதாக இருப்பதுபோல் அவற்றின் அமைப்பு, பெருப்பம், கலைமரபு என்பன வட்டார அடிப்படையில் வேறுபட்டிருப்பதை வடமராட்சி, கந்தரோடை, ஆனைக்கோட்டை ஆகிய இடங்களில் உள்ள சுமைதாங்கிகளை ஒப்பிட்டதிலிருந்து தெரிகிறது.

**மடங்கள்**

மடம் என்ற சொல்லுக்கு பழந்தமிழ் இலக்கியத்தில் இடம், சத்திரம், பிரமச்சாரிகளும், சந்நியாசிகளும் வாழும் இடம் எனவும், மதுரைத் தமிழ்ப் பேரகராதியில் அறப்புறம், இரதம், கோயில், சத்திரம், முனிவர் வாசம் எனவும் குறிப்பிடப்படுகிறது. (மதுரைத் தமிழ்ப் பேரகராதி - பாகம்: 2. 2004.348)

எமது பண்பாட்டில் மடங்களின் தோற்றம் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்டது. அநுராதபுரத்தில் உள்ள 2200 ஆண்டுகளுக்கு முற்பட்ட பிராமிச் சாசனம் ஒன்று தமிழ் வணிகர்கள் ஒன்று கூடி ஆலோசனை நடத்துவதற்காக அமைத்த மண்டபம் பற்றியும், அந்த மண்டபத்தில் உள்ள கல் இருக்கையில் அமர வேண்டிய தமிழ் வணிகர்களின் பெயர்கள் பற்றியும் கூறுகின்றது.

ஆனால், மடங்கள் தோன்ற முன்னர் மக்கள் மரநிழலைத் தமது தங்குமிடமாகப் பயன்படுத்தினர். சங்க இலக்கியத்தில் இவ்விடம் 'நிழல்தருமரம்' எனக் குறிப்பிடப்படுகிறது. இவை இளைப்பாறிப் பசி தீர்த்துச் செல்லும் மையமாகவும், இராப்பயணங்களின்போது திருடர் தொல்லையிலிருந்து பயணிகளையும் பொருட்களையும் பாதுகாக்கும் காவலரணாகவும் தொழிற்பட்டிருந்ததை இலக்கியங்கள் ஊடாக அறிய முடிகின்றது.

இடைக்காலத்தில் மடம் என்ற சொல்லிற்கு 'அம்பலம்' என்ற இன்னொரு பெயரும் இருந்துள்ளது. இதற்குச் சான்றாக, புத்தளத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கி.பி 11 ஆம் நூற்றாண்டுக்குரிய கல்வெட்டு ஒன்றில் ஐந்நூற்றுவர் என்ற வணிகர் போக்குவரத்துக்கு வசதியாக அம்பலம் ஒன்று இருந்தது பற்றிக் கூறுகிறது.

இச்சாசனம் குறிப்பிடும் அம்பலம் ஐந்நூற்றுவரின் வணிகப் பாதையில் அமைக்கப்பட்ட அமைப்பாகவும், அவை பெரும்பாலும் நெடுந்தூரம் பிரயாணம் செல்லும் வணிகரும் பிறரும் தங்கள் சுமைகளையும் பொருட் பொதிகளையும் இறக்கி வைத்து, தங்கியிருந்து, இளைப்பாறும் பொது நிலையங்களாகவும் வர்ணிக்கப்படுகின்றன. (பேராசிரியர். சி. பத்மநாதன் 2006:125-128) யாழ்ப்பாணத்தில் ஆவுரஞ்சிக்கற்கள், சுமைதாங்கிக்கற்கள் காணப்பட்ட இடங்களில் பெரும்பாலும் மடங்கள் இருந்ததற்கான ஆதாரங்கள் காணப்படுகின்றன. இன்று குடாநாட்டில் காணப்படும் நகரங்கள், சிறுநகரங்கள், வணிக மையங்கள், மக்கள் நெருக்கமாக வாழுமிடங்கள் என்பவற்றை ஆராய்ந்து பார்த்தால், அந்த இடங்களில் பெரும்பாலும் அழிவுண்ட கலைவடிவங்களாக மேற்கூறப்பட்ட சின்னங்கள் இருப்பதைக் காணலாம்.

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் கால ஆவணங்கள் யாழ்ப்பாணத்தில் பெரிதும், சிறிதுமாக இருந்த 500 ஆலயங்களையும், மக்களது இருப்பிடங்களையும், நிர்வாகக் கட்டடங்களையும் இடித்தழித்து, அவற்றின் கட்டட எச்சங்களைப் பயன் படுத்தியே கிறிஸ்தவ தேவாலயங்கள், நிர்வாக மையங்கள், கோட்டை என்பவற்றை கட்டியதாக கூறுகின்றன. இது உண்மை என்பதைத் தற்போது கோட்டையில் மேற்கொள்ளப்பட்டு வரும் தொல்லியல் அகழ்வாய்வில் கிடைத்து வரும் யாழ்ப்பாணத்து மரபுரிமைச் சின்னங்கள் உறுதி செய்கின்றன.

ஆனால், அவர்கள் ஆட்சியில் குடாநாட்டில் காணப்பட்ட ஆவுரஞ்சிக்கல், சுமைதாங்கி, சிறிய மடம் என்பன தமிழர் பண்பாட்டில் முக்கிய அம்சமாக உணரப்படாததால் அவர்களது கலையழிவு நடவடிக்கையிலிருந்து அவை தப்பியுள்ளன.

பிற்காலத்தில் ஏற்பட்ட மோட்டார் பாவனை, வீதியோர பஸ்தரிப்பு நிலையங்கள், மின்சார தந்திக்கம்பங்கள், மைல்கற்கள், சுற்றுமதில்கள் என்பன மாடுகளினதும் மக்களினதும் தேவைகளைப் பூர்த்தி செய்ததால் இவற்றின் அவசியம் உணரப்படவில்லை. இவ்வாறு நீண்டகாலம் பாவனையில் இருந்து தப்பிவந்த எமது பண்பாட்டுச் சின்னங்களும், எச்சங்களுமே இன்று முற்றாக மறைந்து போகும் நிலைக்கு வந்துள்ளன. குடாநாட்டு மக்களிடையே இம்மரபுரிமை சின்னங்கள் பற்றிய போதிய விழிப்புணர்வு இல்லாமை, குடாநாட்டு வீதிகளின் அபிவிருத்தி நடவடிக்கைகள் போன்றன இதற்கு காரணங்களாக அமைகின்றன. இதனால், இச்சின்னங்களைப் பாதுகாக்க வீதி அகலிப்பு அவசியமில்லை என்பது கருத்தல்ல, தென்னிலங்கையிலும், பிறநாடுகளிலும் வீதி அகலிப்பின்போது இவ்வகையான பண்பாட்டுச் சின்னங்களைப் பாதுகாக்க பல உத்திகள் பின்பற்றப்பட்டுள்ளன. அவற்றைக் குடாநாட்டு வீதியகலிப்பிலும் நடைமுறைப் படுத்தினால், பல மரபுரிமைச் சின்னங்களைப் பாதுகாப்பதுடன், அவையே வீதி அபிவிருத்தியின் அடையாளங்களாகவும் அமையும் என்பதில் ஐயமில்லை. வீதியகலிப்பின் போது அருகில் உள்ள மின் கம்பங்கள், தொலைத்தொடர்பு தந்திக்கம்பங்கள் என்பவை சற்றுத் தள்ளி அதே இடத்தில் அமைப்பதற்குத் திட்டமிடப்படுவதுபோல், இக்கலைச் சின்னங்களையும் சற்றுத்தள்ளி அதே இடத்தில் மீள் புனரமைப்பு செய்யலாம் என்று இங்கு சுட்டிக் காட்டப்படுகிறது. அதற்கு அந்த இடத்தில் பொருத்தமற்றிருப்பின் அந்த வீதியின் இன்னொரு

இடத்தில் மீளமைக்கலாம். குடாநாட்டின் வீதி அகலிப்பின் போது நாற்சந்திகள், முற்சந்திகள் அமையும் சுற்று மையத்தில் சிறிய கட்டடங்கள், கலைச்சின்னங்கள் என்பவற்றை அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாக அறிகிறோம். அதற்குப் பதிலாக, சிதைவடைந்து போகும் ஆவுரஞ்சிக்கல், சுமைதாங்கி, மடம் என்பவற்றை அவ்விடங்களில் அமைப்பது இதுவரை மறைபொருளாக இருந்து வந்த எமது பண்பாட்டுச் சின்னங்களின் முக்கியத்துவத்தை வெளிச்சத்திற்குக் கொண்டு வருவதாக அமையும்.

இதன் பின்னணியிலேயே யாழ்ப்பாண பல்கலைக்கழக வளாகத்தினுள் வடிவமைக்கப்பட்டிருக்கும் ஆவுரஞ்சிக்கல், சுமைதாங்கி, தொட்டி போன்றனவற்றின் வடிவமைப்பும் மற்றும் இன்றைய யாழ்பாண வாழ்வியல் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் வடமராட்சி பிரதேசத்தை சேர்ந்த ஆவுரஞ்சிக்கல், தொட்டி போன்றனவற்றின் அமைப்பையும் சிறப்பாக குறிப்பிடலாம்.

அநுராதபுரத்தில் உள்ள 2200 ஆண்டுகளுக்கு முற்பட்ட கல்வெட்டு ஒன்று தமிழ் வணிகர் அமைத்த மடம் பற்றிக் கூறுகிறது. குருநாகல் மாவட்டத்தில் உள்ள கி.பி 11 ஆம் நூற்றாண்டுக்குரிய இன்னொரு தமிழ்க் கல்வெட்டு, தமிழ் வணிகர்கள் அமைத்த மடத்தை அம்பலம் எனக் கூறுகிறது. ஆகவே இவ்வாதாரங்கள் இலங்கைத் தமிழர் மத்தியில் மடம், ஆவுரஞ்சிக்கல், சுமைதாங்கி என்பன 2000 ஆண்டுகளுக்கு குறையாத மரபுரிமைச் சின்னங்கள் என்பதனை எடுத்துக் காட்டுகின்றன.

குடாநாட்டில் மோட்டார் வாகனப் போக்குவரத்து அறிமுகமாவதற்கு முன்னர் மக்கள் கால்நடையாகவும், மாட்டுவண்டியிலும் பிரயாணத்தை மேற்கொண்டதால் அவர்களின் தேவை கருதியே இவை வீதியோரங்களில் அமைக்கப்பட்டன. ஆனால், இன்று அவை குடாநாட்டில் பிரதான வீதிகளில் மட்டுமன்றி மக்கள் வாழாத, போக்குவரத்துக்கு பயன்படுத்தாத பல இடங்களில் பாவனை இன்றி காணப்படுகின்றன. இத்தகு இடங்களில் முன்பு மக்கள் அதிகமாக வாழ்ந்தனர் என்பதற்கும், அவ்விடங்கள் ஊடாகப் போக்குவரத்துப் பாதைகள் இருந்தன என்பதற்கும் இவை சான்றாக உள்ளன.

இச்சின்னங்கள் தோற்றமைப்பில் சிறு கட்டடங்களாக இருப்பினும் அவற்றுள் சிலவற்றில் உள்ள சாசனங்கள், குறியீடுகள், தெய்வ உருவங்கள் என்பவற்றை ஆராய்ந்தால், அவை முன்பொரு காலத்தில் எமது சமூக வழக்கில் இருந்த பிரதேச வேறுபாடு, சமூக ஏற்றத்தாழ்வு, சமய நம்பிக்கைகள், பொருளாதார முன்னேற்றம், தனிமனித சமூக அந்தஸ்து என்பவற்றை அடையாளம் காட்டுவதாக அமைந்திருப்பதை உணர முடியும். அதனால்தான் இச்சின்னங்களின் 'பாதுகாப்பு' என்பதை எமது பண்பாட்டின் பாதுகாப்போடு இணைத்துப் பார்க்க வேண்டியுள்ளது.

## உசாத்துணை நூல்கள்


- ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுக நாவலர், 1939, சூடாமணி நிகண்டு, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்பு கழகம், சென்னை.
- மதுரைத் தமிழ்ப் பேரகராதி, 2004, சந்திய பதிப்பகம், சென்னை.
- புஸ்பரட்ணம். ப., 2002, தொல்லியல் நோக்கில் ஈழத்தமிழரின் பண்டைய கால மதமும் கலையும், குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
- பத்மநாதன். சி., 2006, இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள் கி.பி. 700 - 1300, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.


**படங்கள் :** ஆவுரஞ்சிக் கற்கள், சுமைதாங்கிக் கற்கள், மடம்

